**தூய சக்தி மற்றும் நுழைவு முன்னேற்றச் செயற்திட்டம் - 2016**

தூய சக்தி மற்றும் நுழைவு முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிகூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட 2009 யூன் 17 ஆம் திகதிய 2518 ஆம் இலக்க மற்றும் 2519 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளினதும் 0149 - எஸ்ஆர்ஜ ஆம் இலக்க மானிய உடன்படிக்கையினதும் II ஆம் உறுப்புரையின் 2.09 (அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் மற்றும் மானிய உடனபடிக்கைகளின் பிரகாரம் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மின்சார சபை, லங்கா எலக்ரிசிற்றி கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் என்பன செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. (அ) மாநகர வீதி வெளிச்சமிடலின் வலுவான பரிமாற்ற விநியோக வலையமைப்பு மற்றும் தேவை சார்பான முகாமைத்துவம் (ஆ) சிறிய நீர் மின்வலுப் பொறிக்கான வலையமைப்பு தடைகளை அகற்றுதல் மற்றும் (இ) கிழக்கு மாகாணத்தில் வலுவான பரிமாற்ற வலையமைப்பு மற்றும் தெரிவுசெய்யப்பட்ட மாகாணங்களில் சேவை இணைப்புக்களுக்காக விரிவுபடுத்தப்பட்ட கடன் உதவி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றின் ஊடாக இலங்கை மின்சார சபையினதும் லங்கா எலக்ரிசிற்றி கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டினதும் உள்ளடக்கம் மற்றும் சேவையின் வினைத்திறனை மேம்படுத்துவதன் மூலம் மலிவானதும் நம்பகரமானதுமான மின் விநியோகத்தை உணரச்செய்வதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்ட நிர்வாக புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 20,274.80 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 188.20 மில்லியனானதுடன் அதில் ரூபா 17,689.20 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 164.20 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2010 பெப்வரி 09 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2013 மே 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்குப் பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டக் காலப்பகுதி முறையே 2015 ஆகஸ்ட் 20 வரையும் 2016 திசெம்பர் 31 வரையும் நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில்

செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன்கள் மற்றும் மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுதல்களுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்ததா என்பதும்,

(ஊ) கடன்கள் மற்றும் மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களில் இருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுதல்களுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிகூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 நிதிகூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/2 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 2017 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்பட்ட செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2017 ஒக்தோபர் 30 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளபடுகின்றன.

(அ) செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட கிராமிய வீட்டுடமை இணைப்பு வசதிகளின் கீழ் வழங்கப்பட்ட சலுகைக் கடன்கள் மீது மின்சார நுகர்வோரிடமிருந்து 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட்ட ரூபா 49.82 மில்லியன் தொகையான வட்டி வீட்டுடமை இணைப்பு சுழற்சி நிதியத்திற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்ட மானியங்களாக காட்டப்பட்டிருந்தன.

(ஆ) 3,135.21 மில்லியன் தொகையான வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு இலங்கை மின்சார சபைக்கு மாற்றப்பட்ட பெறுமதி மற்றும் உரிய ஒப்பந்ததாரர்களிடமிருந்து மாற்றப்பட்ட ரூபா 331.97 மில்லியன் தொகையான மோட்டார் வாகனங்கள் என்பன செயற்திட்டத்தின் சொத்துக்களாக தொடர்ச்சியாக காட்டப்பட்டிருந்தன.

**2.2.3 இணங்கம் செய்யப்படாத வேறுபாடுகள்**

வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பதிவேடுகளின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பணவளிப்புக்கள் ரூபா 1,459.80 மில்லியன் தொகையானதுடன் இது மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 1,482.67 மில்லியனான நேரொத்த தொகையுடன் இணங்கியிருக்கவில்லை.

**3. நிதிசார் மற்றும் பௌதீகச் செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதும் 2016 திசெம்பர் 31 வரையுமான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான குறித்த சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 164.20 | 17,689.20 | 2,802.00 | 9.91 | 1,482.70 | 120.40 | 18,001.60 |
| இலங்கை அரசாங்கம் | 24.00 | 2,585.60 | - | - | - | - | - |
| சீஈபீ | - | - | 218.00 | 4.45 | 665.20 | 19.30 | 2,880.30 |
| **மொத்தம்** | **188.20** | **20,274.80** | **3,020.00** | **14.36** | **2,147.90** | **139.70** | **20,881.90** |

பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், ரூபா 17,689 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 164.29 மில்லியன் ஒதுக்கீட்டில் 73 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 18,001.60 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 120.40 மில்லியன் மாத்திரம் செயற்திட்டக் காலப்பகுதியின் இறுதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், ரூபா 6.33 மில்லியன் தொகையான கட்டுப்பாட்டுக் கட்டணங்கள் செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துவதிலுள்ள தாமதங்கள் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் வழங்கும் முகவரால் அறவிடப்பட்டிருந்தது.

## 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளபடுகின்றன.

(அ) செயற்திட்ட நடவடிக்கைகளானது சக்தி வினைத்திறன் முன்னேற்றம் புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தி மற்றும் ஏழைகளிற்கான நுழைவு ஆகிய பெயரையுடைய 03 கூறுகளின் கீழ் 08 பகுதிகளை கொண்டிருந்ததுடன் அவற்றில் 06 பகுதிகள் 2015 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. சக்தி வினைதிறன் முன்னேற்றக் கூறின் பகுதி - 01 இன் கீழ் தேசிய முறைமை கட்டுப்பாட்டு நிலையத்தின் நிர்மாண வேலைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக இலக்குகளின் 69 சதவீதத்தை மாத்திரமே அடைந்திருந்ததுடன் அத்தகைய நிர்மாண வேலைகள் 2018 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. மேலும், சக்தி வினைத்திறன் முன்னேற்றக் கூறின் பகுதி - 05 இன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிர்மாண வேலைகளிற்கான ஆலோசனை சேவை ஒப்பந்தம் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்வதிலுள்ள தாமதங்கள் காரணமாக கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) மேற்குறிப்பிடப்பட்ட நிர்மாண வேலைகளின் முடிவுறுத்தல் மீதான ரூபா 485 மில்லியன் தொகையான சேமிப்புக்கள் களனி - வவுனியா விரிவாக்கல் மற்றும் கிராமிய மின்சாரமயமாக்கல் நோக்கங்களிற்கான மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்களின் பெறுகை என்பவற்றின் கீழ் அமுல்படுத்தப்பட வேண்டிய நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. 2014 நவம்பர் 12 இல் ஆரம்பிக்கப்பட்ட களனி - வவுனியா விரிவாக்கல் செயற்திட்டத்தின் கீழான நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் 2016 மே 12 இல் மின்சார விநியோக உப நிலையம் வலுவூட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கிராமிய மின்சாரமயமாக்கல் நோக்கங்களிற்கான மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்களின் பெறுகையின் கீழான நடவடிக்கைகள் பெறுகை செயன்முறையை பிரயோகிப்பதிலுள்ள தாமதங்கள் காரணமாக 2017 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.3 நிதிக் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2010 யூலை 26 இன் 05 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கை என்பவற்றால் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் கொடுக்கல்வாங்கல்கள் இலங்கை மின்சார சபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.